சிறப்பு மாவட்ட நீதிமன்றம், (இயக்கவூர்தி விபத்துக் கோருரிமை
வழக்குகள் தீர்ப்பாயம்),
மதுரை,
முன்னிலை திருமதி. எஸ். ரோகினி, பி.எல்.,
சிறப்பு மாவட்ட நீதிபதி, மதுரை,
2025 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ஆம் நாள் வியாழக்கிழமை
எம்.சி.ஓ.பி.எண்.1329/2023
CNR No.TNMD0D-001004-2023

1. புதுக்கோட்டை-624 404, திருமயம் தாலுகா, நச்சந்துபட்டி அஞ்சல், பன்னீர்பள்ளம், கதவு எண்.92/142 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட். சரவணன் அவர்களின் மனைவி இந்து வயது சுமார் 43 உள்ள வள்ளி
2. புதுக்கோட்டை-624 505, ராமசந்திரபுரம், கடியப்பட்டி, C.A.தெரு, எண்.3/259 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட். சரவணன் அவர்களின் மகள் இந்து வயது சுமார் 23 உள்ள மாரிக்கண்ணு
3. புதுக்கோட்டை-624 404, திருமயம் தாலுகா, நச்சந்துபட்டி அஞ்சல், பன்னீர்பள்ளம், கதவு எண்.92/142 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட். சரவணன் அவர்களின் மகள் இந்து வயது சுமார் 16 உள்ள மைனர் மாலதி
4. புதுக்கோட்டை-624 404, திருமயம் தாலுகா, நச்சந்துபட்டி அஞ்சல், பன்னீர்பள்ளம், கதவு எண்.92/142 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட். சரவணன் அவர்களின் மகன் இந்து வயது சுமார் 19 உள்ள கருப்பையா
5. தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுகா, கட்டயன்காடு, மந்திரிபட்டவர் , எண்.4/56 என்ற விலாசத்தில் வசிக்கும் அரங்கன் அவர்களின் மனைவி சிலம்பாயி ... மனுதாரர்கள்

(Minor 3rd petitioner rep. thro' her Guardian/mother of the 1st petitioner)

/எதிராக/

1. சென்னை-600037, முகப்பேர் மேற்கு, 12வது தெரு, 3வது பிளாக், எண்.751 என்ற விலாசத்தில் இயங்கி வரும் SRP Packers and Logistics,
2. மதுரை, பைபாஸ்ரோடு, KPS ஏர்காடு, 184/25, பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அதன் கிளை மேலாளர்

--- எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 3.02.2025 அன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பழனிவேல் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. C. பிரபாகரன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரரை நீதிமன்றம் அழைத்தும் ஒருதலைப்பட்சமாக்கப்பட்ட நிலையிலும், ஆவணங்களைப் பரிசீலித்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

இறந்துபோன சரவணன் என்பவருக்கு ஏற்பட்ட சாலை விபத்து காயத்திற்கு இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்ட பிரிவு **164** மற்றும் **166** உடனிணைந்த விதி **3(1)–**ன்படியும்**, (**திருத்தப்பட்டசட்டம் **32/2019)–** கீழ் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2. மனுவின் சுருக்கம் :</u>

கடந்த 25.06.2023ம் தேதியன்று மாலை சரவணன் என்பவருக்கு சொந்தமான TN–55–R–5439 டிவிஎஸ் எக்ஸ்.எல்ஹெவிடுட்டி வாகனத்திலும், முருகேசன் என்பவர் அவரது வாகனத்தையும் எடுத்துக்கொண்டு கடியாபட்டியில் உள்ளஎன்னிடம் பணம் வாங்கி வருவதாக கூறிவந்தார்கள். இந்நிலையில் 25.06.2023ம் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் திருச்சி–காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் செந்தூரான் கல்லூரி அருகில் சரவணன் அவரது வாகனத்தில் ஹெல்மெட் அணிந்து சாலையின் ஓரமாக சுமாரான வேகத்தில் முன்னால் செல்ல அவருக்கு பின்னால் முருகேசன் சென்று கொண்டிருந்தபோது எரரே வந்த 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN13–Z–2380 KIA SELTOS காரை அதன் ஓட்டுநர் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை முறையாக கடைப்பிடிக்காமலும் ஹாரன் ஒலி எழுப்பாமலும் ஓட்டி வந்து சரவணன் என்பவரின் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார். அதனால் சரவணன் கீழே விழுந்து உடம்பு

முழுவதும் பலத்த காயமடைந்துவிட்டார். உடனடியாக கடந்த 25.0.2023ம் தேதியன்று அவரை அரசு மருத்துவமனை திருமயத்திற்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை அளித்து அன்றைய தினமே புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று 27.06.2023ம் தேதிவரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 27.06.2023ந் தேதியன்று மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் கவனக்குறைவும், அஜாக்கிரதையுமே காரணமாகும். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர். மேற்படி வாகனத்தை 2ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்து ஊர்ஜிதத்தில இருந்து வருகிறது. எனவே மனுதாரர்கள் ரூ.40,00,000/- இழப்பீடு கேட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) 2<u>ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்-</u>

மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவைகள் இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. கடந்த **25.06.2023** அன்று சுமார் **18.30** மணி அளவில் இறந்தவர், திருச்சியிலிருந்து காரைக்குடி என்.எச் சாலையில் ரெஜி.எண்.டி.என்.**55**.ஆர்.**5439** என்ற டி.வி.எஸ் எக்ஸ்எல் எண்ணை போக்குவரத்து விதிகளைப் பின்பற்றி ஓட்டிக் கொண்டிருந்தார், அப்போது **1**ம் எதிர்மனுதாரின் கார் எதிரே டிஎன்**13**இசட்**2380** என்ற பதிவு எண் எதிரே வந்து கொண்டிருந்தது. செந்தூரான் கல்லூரி அருகே, **1**ம் எதிர்மனுதாரின் ஓட்டுநர் இறந்தவரின் வாகனத்தின் மீது மோதியதால் இறந்தவர் கீழே விழுந்து உடல் முழுவதும் பலத்த காயங்களுக்கு ஆளாகியுள்ளார் என்று மனுவில் கூறியுள்ளது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். எனவே மனுதாரர் இழப்பீடு பெறுவதற்காக மனுதாரர் பல்வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு

கோரியுள்ளார். இறந்துபோனவரின் வயது, தொழில், மாத வருமானம் ஈட்டும் திறன் ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) இந்த வழக்கில் தீர்மானிக்கவேண்டியவை:

1) 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான காரை அதன் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஹாரன் ஒலி எழுப்பாமலும் வாகனத்தை ஓட்டி வந்து இறந்த சரவணன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டதா?

2) மனுதாரருக்கு யாரால் இழப்பீடு வழங்க வேண்டும்? மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

3) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

5) மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 மற்றும் ம.சா.2 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.18 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். சான்றாவணங்களாக எ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) பிரச்சனை–1

25.06.2023ம் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் திருச்சி– காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் செந்தூரான் கல்லூரி அருகில் சரவணன் அவரது வாகனத்தில் ஹெல்மெட் அணிந்து சாலையின் ஓரமாக சுமாரான வேகத்தில் முன்னால் செல்ல அவருக்கு

பின்னால் முருகேசன் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான **TN13-Z-2380 KIA SELTOS** காரை அதன் ஓட்டுநர் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை முறையாக கடைப்பிடிக்காமலும் ஹாரன் ஒலி எழுப்பாமலும் ஓட்டி வந்து சரவணன் என்பவரின் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், அதனால் சரவணன் கீழே விழுந்து உடம்பு முழுவதும் பலத்த காயமடைந்துவிட்டதாகவும், உடனடியாக கடந்த 25.06.2023ம் தேதியன்று அவரை அரசு மருத்துவமனை திருமயத்திற்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை அளித்து அன்றைய தினமே புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று 27.06.2023ம் தேதிவரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 27.06.2023ந் தேதியன்று மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

7. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையினை பரிசீலனை செய்யும்பொழுது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் மீது முதல் தகவல் அறிக்கை இ.த.ச.பிரிவுகள் 279, 304ஏ-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

8. ம.சா.2 ஐ 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்பொழுது விபத்து சாலை திருச்சியிலிருந்து காரைக்குடி செல்லும் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். விபத்தில் இறந்தவர் எனக்கு முன்னால் 25 அடி தூரத்தில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். கார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தது. விபத்து சாலையின் நடுவே மையக்கோடு போடப்பட்டிருந்தது. நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும்போது

இடதுபுறம் கிழக்கு பக்கம் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் சாலையின் தவறான பாதைக்கு சென்று 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், தலைக்கவசம் அணியாமலும் ரோட்டின் தவறான பாதைக்கு சென்று 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. அவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9. எ.ம.சா.1 ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்பொழுது விபத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமான குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. எ.ம.சா.ஆ.1– சம்பவ வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அது குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்தள்ளார்.

10. ம.சா.ஆ1 முதல் தகவல் அறிக்கை ஆகும். ம.சா.ஆ.2 இறுதி அறிக்கை ஆகும். ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 சான்றவாணங்கள் மற்றும் சம்பவ சாட்சியான ம.சா.2–ஐ ஆராய்ந்து பார்க்கும்பொழுது விபத்தில் திருச்சி– காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் செந்தூரான் கல்லூரி அருகில் 25.06.2023ம் தேதி மாலை சுமார் 6.30 மணிக்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது மேற்படி அதே ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN13Z2380 என்ற எண்ணுள்ள KIA

SELTOS நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் ஷ்யாம்லால்திமன் என்பவர் வாகனத்தை கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்து சரவணன் ஓட்டிசென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

11. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.1ஐ தயார் செய்த அதிகாரியை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்படவில்லை. ம.சா.ஆ.1ல் இணைக்கப்பட்டுள்ள பார்வை மகஜரில் கண்டுள்ள விவரங்கள் தெளிவாக புலப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் கூறியுள்ள சங்கதிகளை மறுக்கும் விதமாக சாட்சிகள் ஏதும் அமையவில்லை. ம.சா.1, 2 ஆகியோர்களின் சாட்சியத்தையும் ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 ஆகியவற்றை நிராகரிக்கும் அளவுக்கு குறுக்கு விசாரணை சாட்சியத்தின் வாயிலாக எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரவில்லை. எனவே மேற்கண்ட சங்கதிகளை கருத்தில் கொண்டு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிச் சென்று இறந்த சரவணன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது தெரியவருவதால் விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவும் ஒரு காரணம் என்றும், மேலும் ம.சா.ஆ.4ல் இருந்து இறந்துபோன சரவணன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது தெரியவருகிறது. மேலும் ம.சா.1 தமது குறுக்கு விசாரணையில் என் அப்பாவுக்கு ஓட்டுநர் உரிமம்

இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே இறந்தவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிச்சென்று சட்டவிதிமீறல் புரிந்துள்ளார் என்பது தெரியவருகிறது. எனவே இறந்தவரின் கவனக்குறைவும் விபத்துக்கு காரணம் என்றும், இத்தீர்ப்பாயம் முடிவு செய்வதால் விபத்து ஏற்பட இறந்தவரின் கவனக்குறைவின் பங்களிப்பு 10 சதவீதம் என்றும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவின் பங்களிப்பு 90 சதவீதம் என்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை 1க்கு தீர்வு காணப்படுகிறது.

12. <u>பிரச்சனை–2</u>

பிரச்சனை எண்.1ல் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு 90 சதவீதம் என்றும், இறந்தவரின் கவனக்குறைவு 10 சதவீதம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இறந்தவரின் கவனக்குறைவிற்கான 10 சதவீத இழப்பீட்டுத் தொகையை மனுதாரர்கள் பெறத்தக்கவர்கள் இல்லை. விபத்தில் ஈடுபட்ட 1ம் எதிர்மனுதாரரின் வாகனம், 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு ஊர்ஜிதத்தில் உள்ளது என்பது 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவும் சேர்ந்தும் மனுதாரருக்கு இழப்பீடு தொகையை வழங்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். 1ம் எதிர்மனுதாரரின் விபத்தில் ஈடுபட்ட வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 1ம் எதிர்மனுதாரருக்காக 2ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு, 90 சதவீத இழப்பீட்டுத்தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என்று பிரச்சினை எண்.2க்கு தீர்வு காணப்படுகிறது.

13. <u>பிரச்சனை எண்.3</u>

ம.சா.ஆ.6ன்படி இறந்துபோன சரவணன் என்பவருக்கு 1 முதல் 5 மனுதாரர்கள் வாரிசுதாரர்கள் என்பது தெரியவருகிறது. எனவே இறந்தவரின் இழப்பீடு பெற 1 முதல் 5 மனுதாரர்கள் உரிமையுள்ளவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

14. இறந்து போனவரின் வயது 43 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது, மனுதாரர்கள் தரப்பில் இறந்துபோன சரவணன் என்பவரின் வயதைக்காண்பிக்கக்கூடிய ஆவணமாக அவருடைய வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார்கார்டு மேமோ மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இறந்த சரவணன் என்பவரின் பிறந்த தேதி 27.3.1977ஆகும். எனவே இறந்தவரின் வயது 46 என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

15. இறந்துபோன சரவணன் என்பவர் விபத்தின் போது பால்வியாபாரம் மற்றும் கொத்தனார் கூலி வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.40,000/– வருமானம் ஈட்டிவந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. இறந்தவரின் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் சமர்ப்பிக்கப்படவில்லை. விபத்து நடந்த தேதி 25.06.2023 ஆகும். எனவே மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டும், மனுவில் கூறியுள்ள சங்கதிகளை கருத்தில் கொண்டும் **"2019(1) TNMAC 54 (Mad) Andal; Anjali; M.Santhosh Vs. Avinav Kannan and another."** மேற்கண்ட தீர்ப்புரையின்படி இறந்தவரின் மாத வருமானம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

Taking into account the cost of inflation index and therefore taking the basic income at Rs.6500/– the cost the inflation index for the year2023–

2024 (i.e) 348 has to be multiplied and divided by the cost of inflation index for the year 2023–2024 (i.e) 6500x348/129 =17535/-per month. எனவே **இறந்தவரின் மாத வருமானம் ரூ.17535/– என்று தீர்மானிக்கப்படுகிறது.** .

16. இறந்துபோனவரின் வயது 46 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. National insurance Co Ltd., versus Pranay Sethi and others 2017(2) TNMAC 609(SC)- **மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்வு** முடிவின்படி மேற்படி தொகையில் 25% கூடுதல் வருமானமாக கணக்கிடப்பட்டு, **ரூ.**17535 **+4384= ரூ.21919/–என்று** எதிர்கால வளம் என்ற தலைப்பின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகிறது.

17. இறந்துபோனவரின் வயது 46 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய **Smt. Sarla Verma and Ors. v. Delhi Transport Corporation and Another - 2009 (5) LW Page 561** என்ற தீர்ப்பில் கூறியுள்ளபடி இறந்துபோனவருக்கு பெருக்கல் குறியீடு 13என்று நிர்ணயம் செய்யப்பட்டு, இறந்துபோனவச்சார்ந்து ஐந்து நபர்கள் இருப்பதாலும், இறந்துபோன நபரின் சொந்த செலவிற்காக மேற்படி மொத்த தொகை ரூ21919 /–லிருந்து 1/4 சதவீதம் பங்கான ரூ.5480/– கழித்தது போக இறந்து போன நபரைச் சார்ந்தவர்களுக்கான இழப்பீடு(21919–5480=16439) ரூ.16439x12x14= ரூ.2761752/– எனக் கணக்கிடப்படுகிறது. 1ம் மனுதாரர் தமது இல்வாழ்க்கையை இழந்தமைக்காகவும், 2 முதல் 4 மனுதாரர்கள் தமது தகப்பனாரை இழந்தமைக்காகவும், 5ம் மனுதாரர் தமது மகனை இழந்தமைக்காகவும் தலா ரூ.40,000/– கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு

செய்கிறது. காயம்பட்டவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்ற வகையில் மனுதாரர்களுக்கு ரூ.5,000/- கிடைக்கத்தக்கது. ஈமக்கிரிகை செலவிற்காக ரூ.15,000/- மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் Loss of estate ஆக ரூ.15,000/- மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. ஏற்கனவே விபத்து ஏற்பட இறந்தவரின் கவனக்குறைவின் பங்களிப்பு **10 சதவீதம் என்றும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவின் பங்களிப்பு 90 சதவீதம் என்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை 2க்கு தீர்வு காணப்பட்டுள்ளதால் மொத்த இழப்பீட்டுத்தொகை ரூ.2996752/-ல் 10 சதவீதம் கழித்தது போக (ரூ.2996752 /- -(299675)=ரூ.2697077/-) மீதம் ரூ.2697077/- மட்டும் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு வழங்கவேண்டுமென்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.**

20. 1 முதல் 3 பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதை தவிர மனுதாரர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக் கூடியதல்ல என முடிவு செய்து, அவ்வாறே இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, மனுதார்களின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகையாக **ரூ.2697077/-** ஐ 2ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்றும், மேற்படி தொகைக்கு மனு தாக்கலான தேதியிலிருந்து (excluding the period of dismissal for default if any) தொகை செலுத்தும் தேதி வரையிலும் 7.5% வட்டியுடனும் மனு செலவுத்தொகையுடனும் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் E-Transfer மூலம் இந்நீதிமன்ற (in **Indian Bank, A/c Name: MACT Special District Judge, Madurai A/c No.VMSDJKMCOP13292023, IFSC Code: IDIB000K215**.).என்ற

கணக்கில் இத்தீர்ப்பாயத்தில் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. மேற்படி மொத்த இழப்பீட்டுத் தொகையில் 2 முதல் 4 மனுதாரரர்களுக்கு தலா ரூ.**3,00,000**/- கிடைக்கத்தக்கது என்றும், 5ம் மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகையாக ரூ.1,00,000/- கிடைக்கத்தக்கது என்றும், 1ம் மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகையாக ரூ.1697077/- கிடைக்கத்தக்கது என்றும், மேற்படி 1ம் மனுதாரர் தமக்குரிய தொகையில் 50 சதவீதம், வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் உடனடியாக எடுத்துக்கொள்ளலாம் என்றும், 1ம் மனுதாரருக்குரிய மீதமுள்ள தொகையை அவர்களது பெயரில் மூன்று வருடகாலத்திற்கு தேசியமயமாக்கப்பட்ட அதே வங்கியில் நிரந்தர வைப்பீட்டில் வைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.2, 4 மற்றும் 5 மனுதாரர்கள் தமக்குரிய இழப்பீட்டுத்தொகையையும், அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையையும் உடனடியாக பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

3. 3ம் மனுதாரர் இளவர் என்பதால் மேற்படி இழப்பீட்டுத் தொகையை அவர் பருவநிலையை அடையும் காலம்வரை ஏதாவதொரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் அவர்கள் பெயரில் நிரந்தர வைப்பீட்டில் வைக்க வேண்டும் என்றும், இளவர் மனுதாரர் வைப்பீட்டுத் தொகைக்கான வட்டியை மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவருடைய காப்பாளரும். தயாருமான 1ம் மனுதாரர் பெற்றுக்கொண்டு அவற்றை இளவர் மனுதாரர்களின் படிப்பு மற்றும் வளர்ப்பு செலவிற்காக பயன்படுத்திக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

4. மனு தாக்கலான நாள்25.07.2023

5. மனுதாரர் நீதிமன்ற கட்டணமாக ரூ.**26344/-** செலுத்தவேண்டும். மனுதாரர் ஏற்கனவே ரூ.**100/-** செலுத்தியது போக மீதம் கூடுதல் நீதிமன்ற கட்டணம் ரூ.**26244/-**ஐ **15** நாட்களுக்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் அந்த நாட்களுக்குரிய வட்டியை இழக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

6. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.35471/- நிர்ணயம் செய்யப்படுகிறது.

7. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.Cmp.264 to 281 of 2020 **M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and others**ல் 11/5/2020அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப்படாது.

என்னால் உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்13ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SANKARANARAYANAN ROHINI
Digitally signed by SANKARANARAYANAN ROHINI
Date: 2025.02.13 12:39:55 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>

ம.சா.1 – மாரிகண்ணு
ம.சா.2 – முருகேசன்

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

ம.சா.ஆ.1 – விபத்து முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.2 – இறுதி அறிக்கை சான்றிட்ட நகல்
ம.சா.ஆ.3 – பிரேதபரிசோதனை அறிக்கை நகல்
ம.சா.ஆ.4 – இரண்டு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல்
ம.சா.ஆ.5 – இறப்புச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.6 – வாரிசு சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.7 –1ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.8 –2ம் மனுதாரர் ஆதார் கார்டு நகல்
ம.சா.ஆ.9 –3ம் மனுதாரர் ஆதார் கார்டு நகல்
ம.சா.ஆ.10 –4ம் மனுதாரர் ஆதார் கார்டு நகல்
ம.சா.ஆ.11 –5ம் மனுதாரர் ஆதார் கார்டு நகல்
ம.சா.ஆ.12 –1ம் மனுதாரரின் வங்கி பாஸ்புக் நகல்
ம.சா.ஆ.13 –2ம் மனுதாரரின் வங்கி பாஸ்புக் நகல்
ம.சா.ஆ.14 –3ம் மனுதாரர் வங்கி பாஸ்புக் நகல்
ம.சா.ஆ.15 –4ம் மனுதாரர் வங்கி பாஸ்புக் நகல்
ம.சா.ஆ.16 –5ம் மனுதாரர் வங்கி பாஸ்புக் நகல்
ம.சா.ஆ.17 –ம.சா.2ன் ஆதார் கார்டு நகல்
ம.சா.ஆ.18 – சரவணன் என்பவரின் ஆதார் கார்டு நகல்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> –
எ.ம.சா.1 சரவணன்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்–</u>
எ.ம.சா.ஆ.1 – மாதிரி வரைபடம்

SANKARANARAYANAN ROHINI
Digitally signed by SANKARANARAYANAN ROHINI
Date: 2025.02.13 12:40:02 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.

சிறப்பு மாவட்ட நீதிமன்றம்,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.
எம்.சி.ஓ.பி எண்.1329/2023
வரைவு / செவ்வை உத்தரவு
நாள் 13.02.2025